autism education trust

www.autismeducationtrust.org.uk

# உங்கள் குழந்தைக்கு ஒரு பள்ளியைத் தேர்ந்தெடுத்தல

**Choosing a school for your child**
**Tamil version**

**Tel: 07795 667749**
**Email: info@autismeducationtrust.org.uk**
**393 City Road, London EC1V 1NG, UK**

## உங்கள் குழந்தைக்கு ஒரு பள்ளியைத் தேர்ந்தெடுத்தல்

பல தரப்பட்ட பள்ளிக்கூட வசதிகள் இருப்பதால் பெற்றோர் பள்ளியைத் தெரிவுசெய்தல் அல்லது அவர்கள் குழந்தைகளுக்கு ஏளி இயர்ஸ் சென்டர்–early years centre–பாலர் (முன்பள்ளி நிலையம்)– தெரிவு செய்தல் எந்தப் பெற்றோருக்கும் ஒரு குழப்பத்தை உண்டு பண்ணும். ஓரிசம் ஸ்பெக்ரம் டிஸ்ஓடர் – autism spectrum disorder (ஓரிசமும் அஸ்பேர்ஜர் சின்ட்றோமும் உட்பட – autism and Asperger syndrome) ஓரிசம் ஸ்பெக்ரம் குறைபாடு கொண்ட குழந்தைகள் உள்ள பெற்றோர்களுக்குப் பல தரப்பட்ட பள்ளிகள் பற்றிய விவரங்களைத் தந்துதவி விளக்கம் தருவது இத்துண்டுப்பிரசுரத்தின் நோக்கம் ஆகும்.

உங்கள் குழந்தைகளுக்குப் பள்ளியைத் தேடும் போது –ஸ்பெஷல் ஏடியுகேஷனல் நீட்ஸ்– 'special educational needs' (விஷேட கல்வித் தேவைகள்) என்ற சொற்தொடர்களை நீங்கள் கேள்விப்படுவீர்கள். ஸ்பெஷல் ஏடியுகேஷனல் நீட்ஸ்– special educational needs (SEN) (விஷேட கல்வித் தேவைகள்) என்ற சொற்தொடர் இங்கிலாந்தில் அதே வயதுள்ள ஏனைய சக குழந்தைகள் போல் கற்கும் தரத்தில் இல்லாது கற்பதில் கஷ்டங்கள் அல்லது குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்குப் பாவிப்பதே அச்சொற்தொடரின் கருத்தாகும். ஆகவே ஓரிசம் ஸ்பெக்ரம் டிஸ்ஓடர் – autism spectrum disorders ASD ( ஓரிசம் ஸ்பெக்ரம் குறைபாடு ஏஎஸ்டி) – ஐ ஸ்பெஷல் ஏடியுகேஷனல் சீட்ஸ் – விஷேட கல்வித் தேவைகள் என்ற சொற்தொடரில் குறிப்பிடுவது வழமையாகும்.

உங்கள் குழந்தைக்கு ஏற்ற பள்ளியை நீங்கள் தெரிவுசெய்யுமுன் கிடைக்கப்பெறும் பல தரப்பட்ட பள்ளிகள் பற்றி அறிந்திருப்பது முக்கியமானது ஒன்றாகும். ஏஎஸ்டி – ASDs – யின் தாக்கம் ஒவ்வொருவருக்கும் வேறு பட்டதாக இருக்கும். ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு இருப்பதால் ஏற்ற பள்ளிக்கூடம் எது என கருத்தில் எடுப்பது முக்கியமானது என்பதை அறிந்திருப்பது அவசியம்.

## எவ்வகையான பள்ளிகள் கிடைக்கப்பெறும்?

இரண்டு தரப்பட்ட பள்ளிகள் உண்டு, இவை ஒரு நிர்வாகத்தால் நிதி உதவி செய்யப்பட்டு அவர்கள் கொள்கைகளுக்கு அமைய நடைபெறுகிறது என்பதைப் பொறுத்துள்ளது. அவைகளை ஸ்ரேட் மெயின்ரையின்ட ஸ்கூல்ஸ்-state maintained schools (தேசிய மேற்ப்பார்வைப் பள்ளிகள்) எனப்படும். இது உள்ளூர் அதிகார சபையால் பராமரிக்கப்படும். இதில் உள்ளூர் அதிகார சபைக்கு உட்பட்ட பகுதியில் குடியிருக்கும் பள்ளிக்குப் போகும் வயதுடைய எல்லாக் குழந்தைகளுக் மெயின்ரையிட்ஸ்கூல்ஸ் – maintained schools (பராமரிக்கப்படும் பள்ளிகள்) அனுமதி பெற உரிமை உள்ளவர்கள் ஆவார்கள்.

அரசாங்க உதவி பெறாத அல்லது இன்டிப்பன்டன்ட் ஸ்கூல்ஸ் – independent schools (தனியார் பள்ளிகள்) ஆகியன ஸ்பெஷல் ஸ்கூல்ஸ் special schools (விஷேட பள்ளிகள்) எனப்படும். இப்பள்ளிகள் சமய நம்பிக்கை கலாச்சாரம் ஆகியதை அடிப்படையாகக் கொண்டுள்ள மக்களுக்கானதாகும், இப்பள்ளிகளுக்குப் பெற்றோர்கள் தமது சொந்தப் பணத்தில் குழந்தைகளை அனுப்புவார்கள் அல்லது சில சமயங்களில் இவ்வாறான பள்ளிகளுக்கு உள்ளூர் சபையில் இருந்து அவர்கள் பண உதவி பெறலாம். இப்பெரிய பகுதிகளுக்குக் கீழ் இரண்டு தரப்பட்ட பள்ளிகள் உண்டு.

## பள்ளிகளின் பிரிவுகள்

- **மெயின் ஸ்ரீம் ஸ்கூல்ஸ் – Mainstream schools** (அரசாங்கப் பள்ளிகள்) சாதாரண பள்ளிகள் ஆகும். இவை முன்பள்ளி உயர்பள்ளி மாணவர்களுக்கு ஆனதாகும். இவை அரசாங்கத்தின் அல்லது தனியார் மேற்பார்வையில் நடத்தப்படுவனவாகும். யூகே–UK–(ஐஇ) சட்டதிட்டத்திற்கு அமைய (ஸ்பெஷல் நீட்ஸ் டிஸ்ஏபிளிட்டி அக்ட் 2001– Special Educational Needs Disability Act 2001) (குறைபாடு உள்ளவர்களுக்கான விஷேட கல்வித் தேவைகள் சட்டம் 2001) அடிப்படையில் குறைபாடுகள் அல்லது விஷேட தேவைகள் இதில் ஏஎஸ்டி – ASD உள்ள குழந்தைகள் உட்பட இவர்கள் மெயின் ஸ்ரீம் ஸ்கூலில் உள்ள பள்ளிகளில் கற்பதற்கு உரிமை உள்ளவர்கள் ஆவார்கள். பொதுவாக மெயின் ஸ்ரீம் ஸ்கூலில் உள்ள பள்ளிகளில் இவர்களுக்கான விஷேட ஆதரவு வழங்கப்படும். அதில் விஷேட கருவிகளை அளித்துதவுதல், விஷேட கல்வித் திட்டங்கள் அல்லது உதவி ஆசிரியர்களிடமிருந்து மேலதிக கற்பிக்கும் உதவி அளித்தல் ஆகியன இதில் அடங்கும்.

- **அரசாங்கப் பள்ளிகளில் இதற்கென ஒதுக்கப்பட்ட அல்லது இடவசதி உண்டு. ஒரு ஸ்பெஷலிஸ்ட் யூனிட் அல்லது றிசோஸ் பேஸ் – specialist unit or resource base** (விஷேட பகுதி அல்லது வளங்கள் கொண்ட இடம்) அரசாங்க முன்பள்ளி உயர்பள்ளிகளில் ASD உடைய குழந்தைகளுக்கு உண்டு. அப்பகுதிக்கு அல்லது இடத்திற்கு குறைந்தது ஒரு பயிற்சித் தரம் பெற்ற ஆசிரியர் ASD குழந்தைகளுக்கு அரசாங்க பள்ளியில் தேவையான போது உதவுவதற்கு தேவையான சமயத்தில் இருப்பார்.

- **ஸ்பெஷல் ஸ்கூல்ஸ் – Special schools** (விஷேட பள்ளிகள்): ஸ்பெஷல் ஸ்கூல்ஸ் – முக்கியமாக குறைபாடு அல்லது ஸ்பெஷல் எடியுகேஷனல் நீட்ஸ் ஆனவற்றிற்கு உரியதாகும். அங்குள்ள குழந்தைகளின் கவனிப்பு வேறுபட்டனவாக இருக்கும் . சில பள்ளிகள் தனிய ASD உடைய குழந்தைகளுக்கானதாகும். ஏனைய பள்ளிகள் பல வகையான குறைபாடுகளைக் கொண்டன வாகும். அவற்றில் கற்பதில் கஷ்டம், அங்க அசைவுகளில் குறைபாடு அல்லது உடல் நலம் ஆகியனவற்றிற்கான தேவைகளைக் கொண்டு குழந்தைகள் அடங்கும். இவ்வாறான பள்ளிகளில் கடமை ஆற்றும் ஆசிரியர்கள் இவ்வகையான குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பதில் பொதுவாக குறிப்பிட்ட பயிற்சியை பெற்றிருப்பவர்கள ஆவார்கள்.

- **றிசிடென்றல் ஸ்கூல்– Residential schools** – (தங்கியிருந்து கற்கும் பள்ளிகள்) அரசாங்க பள்ளிகள் விஷேட பள்ளிகள் இரண்டும் குழந்தைகள் பள்ளிக்கூட வளாகத்தில் இரவில் தங்கியிருந்து கற்பதற்கான வசதிகளைக் கொண்டுள்ளனவாகும். இவ்வாறான பள்ளி பொதுவாக அரசாங்க பராமரிப்பற்றதாக அல்லது தனியார் பள்ளியாக இருக்கும். குழந்தைகள் தங்கியிருக்கும் காலவரை வேறுபட்டதாக இருக்கும். தங்கியிருந்து கற்கும் சில பள்ளிகள் எஸ்டி– ASD உள்ள குழந்தைகளை வைத்திருக்கும் முக்கிய நோக்கத்தைக் கொண்டுள்ளதாகும். சில குழந்தைகள் வார நாட்களில் மட்டும் இருப்பார்கள். சில குழந்தைகள் ஆண்டு பூராவும் இருப்பார்கள். இப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ASD –க்கான துறையில் ஒரு தரத்திற்கான பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்கள்.

## எவ்வகையான பள்ளிகள் கிடைக்கப்பெறும் என்பதை நான் எவ்வாறு அறியலாம்?

நீங்கள் குடியிருக்கும் பகுதிகளில் மேலே கூறப்பட்ட பள்ளிகள் இருக்கும் என்ற நியதி இல்லை. உங்கள் உள்ளூர் அதிகார சபை இவ்வாறான பராமரிக்கப்படும் பள்ளிகள், அரசாங்க பள்ளிகள், விஷேட பள்ளிகள் உட்பட பள்ளிகளின் பட்டியல் வைத்திருப்பார்கள். அத்தோடு றிசோஸ் பேசிஸ் – resource bases (வளங்களை அடிப்படையாகக்) கொண்ட பள்ளிகளின் பட்டியலும் வைத்திருப்பார்கள்.

நாஷனல் ஓரிஸ்ரிற்றிக் சொசைட்டி – National Autistic Society (தேசிய ஓரிசம் பொதுநல ஸ்தாபனம்) ஏஎஸ்டி – ASD உடைய குழந்தைகளை ஏற்கும் எல்லாப் பள்ளிகளின் பட்டியல் கொண்டு கைப்புத்தகம் வெளியிடுவது உண்டு. அத்தோடு அவர்கள் இணையத்தில் இக்கையேட்டில் உள்ள விவரங்கள் வெளியிட்டும் உள்ளார்கள். www.autism.org.uk/directory என்ற இணைய தளத்தில் இப்பள்ளிகளின் விவரத்தைத் தேடலாம்.

உங்கள் குழந்தையை இன்டிப்பன்டற் –தனியார் பள்ளியில் சேர்ப்பதாக இருந்தால் அது பற்றிய தகவல்களை ஏஎஸ்டி – ASD கபிற்ராஸ் கையிட் ரு ஸ்கூல்ஸ் போர் ஸ்பெஷல் நீட்ஸ்– Gabbitas guide to schools for special needs (விஷேடதேவைகள் கொண்ட பள்ளிகளின் கபிற்றாஸ் கையேடு)–ல் காணலாம். இது உங்கள் உள்ளூர் நூல்நிலையத்தில் அல்லது தகவல் அளிக்கும் சேவைகளான கிபிற்றாஸ்– Gabbitas– அல்லது இன்டிப்பன்டன்ற் ஸ்கூல் இன்பமேஷன் சேர்விஸ(ஐஎஸ்ஐஎஸ்) – Independent Schools Information Services (ISIS) (தனியார் பள்ளிகள் பற்றிய தகவல்கள் அளிக்கும் சேவைகள்) என்பனவற்றில் இருந்து பெறலாம். உங்கள் குழந்தையின் பேச்சு வன்மை, ஐ–கான்– I-CAN, ஏஎப்ஏஎஸ்சீ– AFASIC போன்ற உதவி அளிக்கும் நலவுரிமை ஸ்தாபனங்கள் மொழி பேச்சாற்றல் குறைபாடு உள்ள குழந்தைளுக்கான பள்ளிகள் பற்றிய தகவல்களைத் தந்து உதவி செய்வார்கள். இவ்வாறான தகவல் சம்பந்தமான தொடர்புகளுக்கும் நலவுரிமை ஸ்தாபனங்கள் பற்றி அறிவதற்கும் "**தேவையான தொடர்புகள்**"– Useful contacts என்ற பகுதியில் காணலாம்.

சில சமயங்களில் உங்கள் குடும்ப நண்பர்கள் மூலம் உங்கள் பகுதியலுள்ள "சிறந்த பள்ளி – best school" எது எனக் கேட்டறியலாம். ஒவ்வொரு குழந்தைகளின் தேவையும் வேறுபட்டதாக இருக்கும். அத்தோடு ASD உள்ள ஒரு குழந்தைக்கு ஏற்ற இடம் அதே குறைபாட்டை உடைய இன்னும் ஒரு குழந்தைக்கு ஏற்றதாக அந்த இடம் இருக்க வேண்டும் என்று இல்லை. நீங்கள் உங்கள் குடும்பத்திற்கும் குழந்தைக்கும் ஏற்ற இடத்தை ஆராய்ந்து நீங்களே தேடிக்காண வேண்டும்.

## பள்ளியைப் பார்வையிடுதல்

உங்கள் குழந்தை எவ்வாறான பள்ளிக்குப் போக வேண்டும் அல்லது அது பற்றி நீங்கள் இதுவரை சிந்திக்காது இருக்கலாம். எதுவாயிருந்தாலும் நீங்கள் உங்கள்குழந்தைக்கு அப்பள்ளி ஏற்றதா இல்லையா என்பதை நேரடியாகப் போய் பார்ப்பதன் மூலமே அறியக்கூடும். உங்கள் பகுதியில் உள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் உங்களால் போய் பார்க்க முடியாது. இருந்தும் அரசாங்கப் பள்ளி யூனிற்ஸ் – units பள்ளிகள் , ஸ்பேஷல் விஷேட பள்ளிகள் ஆகியனவற்றைப் போய் பார்வையிடுவது பிரயோசனம் உள்ளதாகும். இது உங்களுக்கு ஒவ்வொரு பள்ளியும் அவற்றின் அமைப்பும் உங்கள் குழந்தைக்கு அளிக்கும் சேவைகள் பற்றிய ஒரு தெளிவான விளக்கத்தைத் தரும். உங்கள் குழந்தைக்கு முக்கியமானது எவை என்பதை விளங்கிக் கொள்ள இந்த முதல் விஜயம் உதவியாக இருக்கும்.

நீங்கள் இதற்குமுன் பள்ளிகளுக்கு விஜயம் செய்யாது இருந்தால் பள்ளிக்குப் போய் பார்வையிடுவது சிரமமாக இருக்கும், இவ்வாறு பள்ளிகளைப் போய் பார்வையிடும் போது நீங்கள் தனியே போகாமல் உங்கள் துணைவர், நண்பர் அல்லது குடும்ப அங்கத்தினர் அல்லது உள்ளூர் பெற்றோர் ஆதரவு அளிப்பவர் ஆகியவர்கள் கூட வருவது உங்களுக்கு ஆதரவாக இருக்கும். இவ்வாறான விஜயத்தின் போது உங்கள் கூட துணைக்கு யாரும் இருந்தால் பள்ளிகள் பற்றிய ஒரு எண்ணம் உங்கள் மனதில் உதிக்கும். அத்தோடு பள்ளி பற்றிய வெவ்வேறான கருத்துக்கள் ஏற்படும். மேலும் நீங்கள் ஒவ்வொருவரும் பள்ளியைப் பார்வையிடுமுன்பு எதைக் கருத்தில் கொண்டிருக்கிறீர்கள் என்பதும் தெரிய வரும். உதாரணமாக நீங்கள் கெட்ரீச்சர்– Head teacher - தலைமை ஆசிரியருடன் அல்லது விஷேட SENCO (special educational needs co-ordinator) கல்வித்தேவையாளர் இணைச் செயலாளர் அல்லது அரசாங்க பள்ளிகளில் விஷேட தேவைகள் கொண்ட குழந்தைகளுக்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தவர்), உங்களுக்கு வசதிகளைக் காண்பிக்கும் பள்ளியில் உள்ள உத்தியோகத்தர் ஆகியோருடன் உங்கள் கூட வருபவர்கள் கிடைக்கும் வசதிகள் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைப்பற்றிப் கலந்துரையாடலாம். அத்தோடு நீங்கள் கேட்டறிய வேண்டியனவற்றைப் பள்ளியைப் பார்வையிட வருமுன் ஒரு பட்டியல் இட்டு வருவது உகந்ததாவும்.

## கேட்டக வேண்டிய கேள்விகள்

உங்கள் தேவைகளைப் பொறுத்து குறிப்பிட்ட கேள்விகளை நீங்கள் கேட்டறியலாம். கீழே உதாரணமாகத் தரப்பட்ட கேள்விகள் சில சமயம் உங்களுக்கு உபயோகமாக இருக்கும்.

1. ஏஎஸ்டி– ASD உள்ள குழந்தைகளுக்கு எவ்வாறான அணுகுமுறை அல்லது திட்டங்கள் உங்கள் பள்ளி கையாளுகிறது?
2. உதாரணமாக உங்கள்பள்ளி குறிப்பிட்ட ரீஈஏச்சீஎச்–TEACCH அணுகுமுறையை நடைமுறை செய்து கொண்டிருந்தால் குழந்தையின் தேவையைப் பொறுத்து அந்த அணுகு முறையில் மாற்றங்கள் ஏதும் செய்வார்களா?
3. தனிப்பட்ட வழிமுறைகளிலும் கூட்டாகவும் கற்பதற்கு இப்பள்ளி உரிய சந்தர்ப்பங்களை அளிக்கிறதா?
4. மதிய உணவு கிடைக்கும் இடைவேளை நேரம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது? உதாரணமாக லன்சு ரைம் கிளப்–lunch-time-clubs – (மதிய நேர சங்கம்) அல்லது எனைய ஒழுங்கு செய்யப்பட் செயற்பாடுகளில் எனது குழந்தை பங்கெடுக்கலாமா?

5. மேலதிக பாண்டித்தியம் பெற்றவர்களிடமிருந்து உங்கள் குழந்தை எவ்வகையான ஆதரவைப் பெறுகிறது. உ–ம்: ஸ்பீச் அன்ட் லான்கிவிச் திறப்பிஸ்ட் – speech and language therapist – அல்லது ஆக்கிபேஷனல் திறப்பிஸ்ட் – occupational therapist-(மொழி பேச்சு வன்மை மருத்துவர்)?
6. ஏஎஸ்டி அட்வைசறி ரீச்சர் – ASD advisory teacher ( ASD - அறிவுரை வளங்கும் ஆசரியர்) ஆதரவு கிடைக்கும் காலவரை ஏன்ன?
7. ஒழுங்கு முறையிலான பெற்றோர்கள் தொடர்பு எவ்வகையானவழிவகையில் கையாளப்படுகிறது (–ம்: வீட்டு பள்ளிக்கூட புத்தகங்கள், மின்அஞ்சல் வழியாக, கைத்தொலைபேசி மூலம் செய்திகள் அனுப்புதல், செய்தித் தாள்கள்)?
8. ASDs–யில் எல்லா ஆசிரியர்களும் குறிப்பிட்ட பயிற்சி பெற்றிருக்கிறார்களா?
9. இவ்வாறான பயிற்சிகள் ஒழுங்கு முறையில் நிகழ்காலம் வரை அளிக்கப்படுகிறதா?
10. ASD உடைய குழந்தைகளுடன் தொழில் புரிவதற்கு ஆசிரியர்கள் அனுபவம் பெற்றிருக்கிறார்களா?
11. ஒரு குறிப்பிட்ட குழந்தை பற்றி சக ஆசிரியர் எவ்வாறான இடைவெளிகளில் தொடர்பு கொள்கிறார்கள் ( இதில் ஆசிரியர்கள் உட்பட, classroom assistants– வகுப்பு துணை ஆசிரியர்கள், lunchtime supervisors – மதிய இடைவேளை மேற்பார்வையாளர்கள், bus escorts – பஸ் வண்டியில் கூட்டித்திரிபவர்கள் பள்ளிக்கு வெளியே உள்ள பாண்டித்தியம் கொண்டவர்கள் அடங்குவர்)?
12. ஏஎஸ்டி –ASD உள்ள குழந்தைகளுக்கு பள்ளி நேரத்திற்கு முன் பின் ஆதரவு அளிக்கப்படுகிறதா (உதாரணமாக breakfast clubs–பிறேக்பஸ்டு கிளப்ஸ், after school clubs – (பள்ளி நேரம் முடிந்த பின் நடக்கும் சங்கம்)?
13. குறிப்பிட்ட எஸ்ஈஎன் அன்ட் பில்லியிங் போலிசி – SEN and bullying policy - (எஸ்ஈஎன், தொல்லை கொடுக்கும் கொள்கைள்) பற்றிய கோட்பாடுகள் பள்ளியில் இருக்கிறதா? ( அவ்வாறு இருந்தால் கோட்பாடுகள் கொண்ட பிரதி ஒன்றைக் கேட்டு வாங்கவும்).
14. முழுப் பள்ளிக்கூடத்திற்கான பழக்க வழக்கக் கோட்பாடுகள் இருக்கிறதா? (பிரதி ஒன்றைக் கேட்டுப் பெறவும்)

கேள்விகள் கேட்பது, கோட்பாடுகளின் பிரதிகளைப் பெறுவது மட்டோடு இல்லாது பள்ளியையும் சுற்றிப் பார்த்து அது எவ்வாறு உள்ளது என்பதையும் கண்டறியுங்கள்:

- எவ்வாறான செயல் பாடுகளில் குழந்தைகளை ஈடுபடுத்துகிறார்கள்?
- ஆசிரியர்கள் அணுகக் கூடியவர்களாக, இன்முகத்தோடு இருக்கிறார்களா?
- கற்பிப்பதில் கையாளும் வேறுபட்ட வழிவகைகளைக் கண்டறியவும் உ–ம்: பாடநேர அட்டவணை.
- பள்ளிக்கூட கட்டடிட அமைப்பு உங்கள் குழந்தைக்கு ஏற்றதாக உள்ளதா (சத்தம், வெளிச்சம், பள்ளியில் இருந்து எவ்வளவு சுகமாக வெளியே வரலாம்!!) ??
- விளையாட்டு நேரத்தில் குழந்தைகளை எவ்வாறு ஈடுபடுத்துகிறார்கள்?

- உங்கள்குழந்தை அமைதியாக இருக்க விரும்பினால் விளையாட்டு இடத்தில் தனியாக இருப்பதற்கு ஏற்ற இடம் இருக்கிறதா?
- உங்கள் குழந்தைக்குத் தொல்லை கொடுக்கக் கூடிய ஒளிவு மறைவான இடம் ஏதாவது இருக்கிறதா?
- விளையாட்டு இடத்தில் பெரியவர்கள் மேற்பார்வை செய்கிறார்களா?

வசதி கிடைத்தால் அப்பள்ளிக்குக் குழந்தைகளை அனுப்பும் பெற்றோர்களுடன் கலந்துரையாடி அவர்களின் அனுபவத்தைக் கேட்டறியுங்கள். எவ்வாறாயினும் உங்கள் குழந்தைக்குத் தேவையானவை அவர்கள் குழந்தைக்குத் தேவையானதை விட வேறுபட்டதாக இருக்கும்.

## நீங்கள் தேர்ந்த பள்ளிகளிகன் எண்ணிக்கையை குறுக்கிக் கொள்ளல்

நீங்கள் பல தரப்பட்ட பள்ளிகளுக்கு விஜயம் செய்திருந்ததால் அவற்றின் அடிப்படை முக்கியமானவை பற்றி அறிந்திருப்பீர்கள். அவற்றினை ஒரு பட்டியல் இட்டு நீங்கள் பார்த்த பள்ளிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். நீங்கள் பார்த்த பள்ளிகள் எல்லாவற்றிலும் உங்களுக்குத் தேவையான எல்லா அடிப்படை முக்கியமானவைகளும் இருக்க மாட்டது. உங்கள் தெரிவுகளைக் குறைத்து இரண்டு அல்லது மூன்று பள்ளிகளைத் தெரிவு செய்யவும். இவ்வாறு தெரிவு செய்து வைத்திருப்பதன் மூலம் உங்கள் முதல் தெரிவில் இடம் கிடைக்காவிட்டால் இரண்டாவது தெரிவைத் தேர்ந்து எடுக்கலாம்.

## பள்ளிகளுக்கு விண்ணப்பித்தல்

ஏஎஸ்டி – ASD உள்ள சில குழந்தைகளுக்கு ஸ்ரேற்மன்ட் ஆப் ஸ்பெஷல் எடியுகேஷனல் நீட்ஸ் – statement of special educational needs (விஷேட கல்வித் தேவைகள் பற்றிய அறிக்கை) தேவைப்படும். இதை சிலசமயம் ஸ்ரேற்மன்ற்– statement – அறிக்கை எனப்படும். இது உள்ளூர் அதிகார சபையால் அப்பள்ளியில் உள்ள குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அதற்கான மேலதிக பணத்தைக் கொடுப்பதற்கும் ஆகும். சில குழந்தைகள் பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதற்கு முன்பே இந்த அறிக்கையைப் பெற்றிருப்பர்.

மேயின்ரேயின்ட், மெயின்ஸ்ரீம் – பராமரிக்கப்படும் பள்ளி, அரசாங்கபள்ளி ஆகியனவற்றிற்கு விண்ணப்பிப்பதற்கு உங்கள் குழந்தையின் விண்ணப்பம் செய்யுமுன் அறிக்கை தேவையில்லை. முன்கூட்டியே விண்ணபம் செய்வதன் மூலம் நீங்கள் பள்ளிகளைத் தெரிவு செய்வதற்கு சந்தர்ப்பம் உண்டு. உங்கள் குழந்தை ஒரு விஷேட பள்ளிக்கு அல்லது ஒரு இன்டிபன்டன் – தனியார் பள்ளிக்கு அனுமதி விண்ணப்பம் செய்வதாக இருந்தால் குழந்தையின் தேவைபற்றிய ஸ்ரேற்மன்ற்– statementing–அறிக்கை முன்கூட்டியே தேவைப்படும். அறிக்கை பற்றிய நடைமுறைகளைப் படித்தறிவதற்கு டிசீஎஸ்எப் –DCSF– (பெற்றோர், குழந்தைகள் பள்ளிகளுக்கான திணைக்களகம்) –இல் உள்ள பெற்றோர் கவனிப்பாளர் கைப்புத்தகத்தைப் பார்க்கவும்.

## உங்கள் குழந்தையின் அறிக்கை ஒன்றை வைத்திருந்தல்

சட்டத்தின் பிரகாரம் பெற்றோராகிய நீங்கள் உங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு உரிமை உள்ளவர்கள் ஆவீர்கள். உங்கள் குழந்தை இறுதி அறிக்கையை வைத்திருந்தால் ஆவணத்தின் பகுதி 4–ன் பிரகாரம் அக்குழந்தை போக வேண்டிய பள்ளியின் பெயர் தெரியப்படுத்தப்படும். எதுவாயிருந்தாலும் பகுதி4 –**முன்மொழிந்த** ஸ்ரேற்மன்ற்– அறிக்கை (ஒரு பிரதி, பூர்த்தியான ஆவணம் முடியுமுன்பே அனுப்பி வைக்கப்பட்டிருக்கும்) பலனளிக்காததாகும். உங்களுக்கு முன்மொழிந்த ஸ்ரேற்மன்ற -அறிக்கை கிடைக்கப்பெற்றதும் உங்கள் உள்ளூர் அதிகார சபையிடம் நீங்கள் தெரிவுசெய்த பள்ளிகளின் பெயரை சேர்த்துக் கொள்ளும்படி கேட்கலாம். உள்ளூர் அதிகார சபை உங்கள் வேண்டுகோளை ஏற்பதற்கு முன் நீங்கள் தெரிவு செய்த பள்ளி உங்கள் குழந்தையை ஏற்றுக் கொள்வார்களா என்பதை அறிந்து கொள்ளும்.

உள்ளூர் சபை நீங்கள் தெரிவு செய்த பள்ளியை நிராகரித்தால் அதற்கான காரணத்தை கேட்கலாம், அத்தோடு அந்த முடிவை மறுபரிசீலனை செய்யும்படியும் கேட்கலாம். மேற்கூறப்பட்ட பகுதிகளில் உங்களுக்குப் பிரச்சனைகள் ஏதும் இருப்பின் விஷேட அறிவுரையைப் பெறுவது நன்று என நாம் சிபார்சு செய்கிறோம். நீங்கள் உள்ளூர் பெறன்ட் பாற்னசிப் சேர்விஸ்– Parent Partnership Service (பெற்றோர் பங்காளித்துவ சேவை) அல்லது "பிரயோசனமான தொடர்புகளுக்கு" என்ற பகுதியில் உள்ள கெல்ப்லையின்– helplines – (உதவிஅளிக்கும் நிலையங்களுடன்) இறுதி ஸ்ரேற்மன்ற் – அறிக்கை யில் கையொப்பம் இடுமுன் தொடர்பு கொண்டு அறிவுரையைப் பெறவும்.

## முன்பள்ளியில் இருந்து உயர்பள்ளிக்கு மாறுதல்

முன்கூட்டியே ஸ்ரேற்மன்ற்– அறிக்கையை வைத்திருக்கும் குழந்தைகள் முன்பள்ளியில் இருந்து உயர் பள்ளிக்கு மாறும் போது பொதுவாக உள்ள அனுமதி வழிமுறையைப் பின்பற்றத் தேவையில்லை. உள்ளூர் அதிகார சபை அறிக்கையில் அந்த ஆண்டுக்கு மாற்றம் செய்யப்படும் புதிய பள்ளியின் பெயரை பெப்ரவரி 15–ல் சேர்த்துக் கொள்ள வேண்டும். இது பற்றிய விவரங்கள் ஸ்பெஷல் எடியூகேஷனல் நீட்ஸ் கோட் ஒப் பிறக்ரிஸ் – Special Education Needs Code of Practice (விஷேட கல்வித் தேவைகள் நடைமுறைக் குறியீடுகள்) பகுதிகள் 5:72 மற்றும் 8:132 பகுதிகளில் காட்டப்பட்டுள்ளது. இந்த ஸ்பெஷல் எடியூகேஷனல் நீட்ஸ் கோட் ஒப் பிறக்ரிஸ் விஷேட கல்வித் தேவைகள் அல்லது கோட் ஆப் பிறக்டிஸ் – Code of practice -(நடைமுறைக் கோட்பாடுகள் ) உள்ளூர் அதிகாரசபையினருக்கு ஸ்பெஷல் எடியூகேஷனல் நீட்ஸ் – Special Education Needs (விஷேட கல்வித் தேவைகள்) உள்ள குழந்தைகளுக்கு உதவ வேண்டும் என்பது பற்றிய வழிகாட்டியாகும்.

கோட் ஆப் பிறக்டிஸ்– நடைமுறைக் கோட்பாடுகள் நடைமுறைக் குறியீடுகள் ஆண்டு 5–க்கான அனுவல் றிவியூ– annual review (மறுபரிசீலனை) ஆண்டு அறிக்கையில் குறிப்பாகக் குழந்தை முன்பள்ளியில் இருந்து விலகும் போது எவ்வகையான பள்ளி அக்குழந்தைக்கு மிக ஏற்றது என்பது பற்றிய கருத்துக்களை சிபார்சு செய்திருக்கிறது. ஆகவே உங்கள் எண்ணத்தில் இருக்கும் உயர் பள்ளிகளுக்கு ஆண்டு 5–வதுக்கான மறுபரிசீலனை ஆண்டு அறிக்கைக்கு முன்னதாக போய் பார்ப்பது உங்கள் குழந்தைக்கான பள்ளியைத் தெரிவு செய்வதற்கு உதவியாக இருக்கும்.

ஏளி அயேர்ஸ்– early years–(பாலர்) பள்ளியில் இருந்து முன்பள்ளிக்கு மாற்றம் அடையும் போது ஸ்ரேற்மன்ற் அறிக்கையில் மாற்றங்கள் ஒரு குறிப்பிட்ட காலவரையில் செய்ய வேண்டும் என்ற நியதிஇல்லை.

## உபயோகமுள்ள தொடர்புகள்

கீழே தரப்பட்ட அதிகமான சேவைகள் ஆங்கிலத்தில் மட்டுமே தரப்பட்டு உள்ளன. ஒரு நிர்வாகம் இத்தகவல்களை ஏனைய மொழிகளில் தந்துதவலாம்.

## தொலைபேசி மூலம் உதவிகள்:

**அட்வோகேசி போ எடியிகேஷன் சேர்விஸ்**

Advocacy for Education Service (கல்விச் சேவைக்குப் பரிந்து பேசும் சேவை)

தொலைபேசி: 0845 070 4002

இணையம்: www.autism.org.uk/advocacy

ஏஎஸ்டி– ASD யினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஏற்ற கல்வியை வழங்கப் பெறுவதற்கும் அக்குழந்தைகளை உடைய பெற்றோருக்கு எவ்வாறு ஏற்ற கல்வியை அக்குழந்தைகளுக்கு அளிக்க முடியும் எனபன பற்றிய அறிவுரையை நாஷனல் ஓரிசிற்றிக் சோசையிட்டீஸ் அட்வோகேசி போ எடியுகேஷன் சேர்விஸ்– National Autistic Society's Advocacy for Education Service (தேசிய ஓரிசம் சங்கமத்தின் கல்விச் சேவை ஆதரவு அளித்து உதவும் சங்கம்) அளித்துதவுகிறது. அத்தோடு ஏஎஸ்டி– ASD –யினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கொண்ட பெற்றோர்கள் தமது கோரிக்கைகளை றைபூனல் –Tribunal – (நியாய சபைக்கு) எடுத்துச் செல்லவும் இவர்கள் அறிவுரை வழங்குகிறார்கள். நாஷனல் ஓரிசிற்றிக் சோசையிட்டீஸ் அட்வோகேசி போ எடியுகேஷன் சேர்விஸ் – தேசிய ஓரிசம் சங்கமத்தின் கல்விச் சேவை ஆதரவு அளித்து உதவும் சங்கம் இவர்களைத் தொடர்பு கொள்ளும் போது நீங்கள் உங்கள் பெயர் விலாசம் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் ஆகிய விவரங்களை ஆங்கிலத்தில் அவர்கள் தொலைபேசியில் பதிவு செய்து விடவும். ஒரு வாரத்தில் பயிற்றப்பட்ட சேவையாளர் உங்களைத் தொடர்பு கொள்ளுவார். உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவை எனின் தயவுசெய்து அதில் உங்கள் மொழியைக் கூறித் தெரியப்படுத்தவும்.

**ஏஎப்ஏஎஸ்ஐநீ– AFASIC**

தொலைபேசி: 0845 355 5577

திறந்திருக்கப்படும் நேரம்: செவ்வாய் புதன்கிழமைகளில் காலை 10–2 மணி வரை வியாழக்கிழமையில் 10முதல் மதியம் வரை

AFASIC ஸ்தாபனம் பேச்சு மொழி ஆற்றல் குறைபாடு உள்ள குழந்தைகளைக் கொண்ட பெற்றோர்களுக்கும் வயது குறைந்தோருக்கும் பள்ளிகள் பற்றிய தகவல்கள் அறிவுரை அளித்து உதவுவார்கள்.

**ஐபிஎஸ்ஈஏ–IPSEA ( Independent Panel for Special Education Advice)**
(விஷேட கல்விக்கான அறிவுரை அளிக்கும் தனியார் ஸ்தாபனம்னு

தொலைபேசி: 0800 018 4016 இணையதளம்: www.ipsea.org.uk

ஸ்பேஷல் நீட்ஸ் எடியுனேஷன்– special needs education – விஷேட கல்வித் தேவை– விஷேட அனுபவம் உள்ள பயிற்சியாளர்களால் உதவி அளிக்கிறது.

**ஏசிஈ– ACE (Advisory Centre for Education) - (கல்வி அறிவுரை நிலையம்)**
தொலைபேசி: 0808 800 5793 (பொது அறிவுரை)
தொலைபேசி: 0808 800 0327 (பள்ளி அனுமதி நிராகரிக்கப்பட்வர்களுக்கான அறிவுரை)
திறந்திருக்கும் நேரம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10:00 முதல் மாலை 5:00 வரை,
இந்த உதவி அளிக்கும் நிலையம் பெற்றோர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் பல வகையான பரந்த கல்விச் சேவை பற்றிய தகவல்களை அளித்து உதவுகிறது.

**Network 81**
தொலைபேசி: 0870 770 3306
இணையதளம்: www.network81.org/
திறந்திருக்கும் நேரம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10 முதல் மதியம் 2 வரை.
விஷேட கல்வி சம்பந்தமான எல்லாத் தேவைகளுக்கான அறிவுரைகள்

## கல்வி அறிவுரை சேவைகள்

**Gabbitas Educational Consultants**
Carrington House
126-130 Regent Street
London W1R 6EE
தொலைபேசி: 020 7734 0161
தொலைநகல்: 020 7437 1764
ஈமெயில் market@gabbitas.co.uk
இணையதளம்: www.gabbitas.co.uk

தமது குழந்தைகளுக்கு ஏற்ற independant தனியார் பள்ளிகளைக் கண்டறிவதற்கு கபிற்றாற்ஸ் எடியுகேஷனல் கன்சல்ரன்ஸ்**- Gabbitas Educational Consultants** – உதவி அளித்து உதவுகிறது. இவ்வாறான சேவைகளுக்கு இவர்கள் பணம் வசூலிப்பது உண்டு.

அத்தோடு விஷேட கல்வித் தேவைகள் கொண்ட குழந்தைகளுக்கு அனுமதி அளிக்கும் **இங்கிலாந்தில் உள்ள எல்லா பள்ளிகளிலும்** independent–தனியார் பள்ளிகள், விஷேட பள்ளிகள் கொண்ட கைப்புத்தகத்தை *Gabbitas guide to schools for special needs* கபிற்றாற்ஸ் எடியுகேஷனல் கன்சல்ரன்ஸ்(Kogan Paul – குகன் போல் வெளியீட்டாளர்கள்) தயாரித்து வெளியிடுகிறார்கள். உங்கள் நூல்நிலையத்தில் அல்லது புத்தகக் கடையில் கேட்டு வாங்கலாம்.

**National ISIS**
Grosvenor Gardens House
35-37 Grosvenor Gardens
London SW1W 0BS
தொலைபேசி: 020 7798 1500
ஈமெயில்: national@isis.org.uk
இணையம்: www.isis.org.uk

இந்த Independent Schools Information Service (ISIS) தனியார் பள்ளிகள் தகவல் சேவை **Gabbitas -** கபிற்றாற்ஸ் போன்று சேவைகளை அளிக்கிறார்கள்.

**National Parent Partnership Network (NPPN)**
(தேசிய பெற்றோர் இணைப்பு)
இணையம்: www.parentpartnership.org.uk/Templates/index.htm

விஷேட கல்வித் தேவைகள் வேண்டிய குழந்தைகளைக் கொண்ட பெற்றோருக்கான Independent Schools Information Service (ISIS) தனியார் பள்ளி தகவல் சேவைக்கு மத்திய அரசாங்கத்தால் நிதி உதவி கிடைக்கிறது. இந்த இணைப்புச் சேவை எல்லா வகையான ஆதரவையும் கண்டறிந்து அவரவருக்கு ஏற்ற பள்ளி இடங்களை அளித்து உங்கள் குழந்தைக்கு கல்வி ஆதரவு அளிப்பதாகும்.

**Invalid Childrens Aid Network (I-CAN)**
**இயலாமை கொண்ட குழந்தைகளுக்கான உதவி இணைப்பு**
I-CAN ஸ்தாபனம் பேசுதல் மொழி ஆற்றல் உள்ள குழந்தைகளுக்கான பள்ளிகள் பட்டியலை வெளியிட்டு இருக்கிறார்கள். உங்களுக்குப் பிரதி வேண்டமாயின் 0870 010 4066 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

## உபயோகமுள்ள வெளியீடுகள்:

The National Autistic Society (2004) - லண்டனில்: தேசிய ஓரிச சமூகம் (2004). *Schools, units and classes for children with autism and Asperger syndrome - ஓரிசம் ஆஸ்பேகர் சின்டறம் கொண்ட குழந்தைகளுக்கான பகுதிகளும், வகுப்புகளும்.* லண்டனில்: தேசிய ஓரிச சமூகம்–The National Autistic Society. இவை NAS வெளியீட்டு ஸ்தாபனத்தில் கேட்டு வாங்கலாம்.

NAS Publications
Central Books Ltd
99 Wallis Road
London E9 5LN

தொலைபேசி: +44 (0)845 458 9911
தொலைநகல்: +44 (0)845 458 9912
ஈமெயில்: nas@centralbooks.com
இணையத்தில் வாங்குவதற்கு: www.autism.org.uk/pubs

© Autism Education Trust 2009 – ஓரிசம் கல்விப் பொறுப்பாட்சி நிறுவனம் 2009

இத்தகவல்கள் யாவும் National Autistic Society – தேசிய ஓஸ்ரிக் கழகத்தைத் தழுவிப் பெறப்பட்டது.

## அருஞ்சொற்கள்)

**After-school clubs (மாலை நேரப் பள்ளிக்கழகங்கள்)** –கலாச்சார மகிழ்ச்சி ஊட்டும் செயல்பாடுகள். இவை வகுப்பு நேரம் முடிந்த பின் பள்ளியில் நடைபெறும்.

**Annual review** (**ஆண்டறிக்கை**) – விஷேட தேவைக் கல்வித் தேவைகளுக்கான ஆண்டு மறுபரிசீலனை அறிக்கை

**ASD advisory teacher (ஏஎஸ்டி அறிவுரை ஆசிரியர்)** – பள்ளிகளுக்கும் முன்பள்ளிகளுக்கும் விஜயம் செய்து அங்குள்ள ஓரிசம் ஸ்பெக்றம் குறைபாடு உள்ள மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அறிவுரை, உதவி வழங்கும் ஒரு விஷேட பயிற்சி பெற்ற ஆசிரியர்

**Asperger syndrome (அஸ்பெஜர் சின்றம்)** – இது கற்பதில் சிரமம் இல்லாதிருக்கும், தாமதித்து வரும் பேச்சு வல்லமை கொண்ட குழந்தைளுக்கு இருக்கும் ஒரு வகையான ஓரிசம்.

**Autism (ஓரிசம்)** – இது ஒருவருக்கு பேச்சு வன்மையில் ஏற்பட்டிருக்கும் குறைபாடு ஆகும். உலகில் அவர்களைச் சுற்றி இது உள்ளது.

**Autism spectrum disorders (ஓரிசம் ஸ்பெக்ரம் உடல்நலமின்மை)** – இது ஓரிசம் கொண்டவர்களுக்கும் அது சம்பந்தப்பட்ட குறைபாடு கொண்டவர்களுக்கும் எற்பட்ட ஒரு "பொதுவான சொற்பதம்" ஆகும்

**Breakfast club (காலைப் பொழுதுக் கழகம்)** – இது பள்ளியில் மாணவர்கள் பள்ளி ஆரம்பமாவதற்கு முன் ஒன்று கூடி காலை உணவு அருந்துவதற்கு என ஆக்கப்பட்ட ஒரு சந்தர்பம்.

**Bus escorts** (**பஸ் வண்டியில் அல்லது ரக்சியல் (வாடகைக்காரில்)**) – அழைத்துச் செல்லுதல். உள்ளூர் அதிகாரசபை குறைபாடு உள்ள குழந்தைகளைப் பள்ளிக்கு ஒரு துணையாளருடன் எடுத்துச் செல்வதும் பின் வீடு கொண்டுவருவதற்குமான சேவை

**Classroom assistants (வகுப்பறை உதவியாளர்கள்)** – தனித்தனி மாணவர்களுக்கோ அல்லது கூட்டாக மாணவர்களுக்கோ உதவுபவர்கள்.

**Department of children, schools and families (DCSF) (குழந்தைகள் பள்ளிகள் பெற்றோர்கள் ஆகியவர்களுக்கான கல்வித் திணைக்கழகம்)** – இது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட நிர்வாகம் ஆகும். குழந்தைகளின் கல்வி மேம் பாட்டிற்கு வழிநடத்தும் ஒரு ஸ்தாபனம்.

**Early years centre (பாலர் நிலையம்)** – இங்கு 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளைப் பராமரிக்கும் இடமாகும். இது பாலர் நிலையம், பள்ளிகள், பகல் நேரக் கவனிப்பு இடம் அல்லது விளையாட்டு குழு போன்றன ஆகும்.

**Head Teacher (தலைமை ஆசிரியர்)** – இவர் பள்ளிக்குப் பொறுப்பானவர் ஆவார்.

**Helplines (அழைப்புதவி)** – பொதுவாக தொலைபேசியில் குறிப்பிட்ட தலைப்பில் தகவல் அறிவுரை வளங்கல்.

**Independent school (தனியார் பள்ளி)** – இப்பள்ளிகள் அரசாங்கத்திடமிருந்து பண உதவி பெறுவது இல்லை.

**Lunchtime clubs (மதியஉணவு நேரக் கழகம்)** – ஏஎஸ்டி கொண்ட மாணவர்களுக்கான செயற்பாட்டுக் குழுக்கள் அல்லது ஆர்வம் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து கழகத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு விருப்பமான செயற்பாடுகள் அல்லது சமூக ஒன்று கூடல் ஆகியனவற்றை நடைமுறைப்படுத்துதல்.

**Lunchtime supervisors (மதிய உணவுவேளை மேற்பார்வையாளர்கள்)** – இவர்கள் பள்ளியில் மதிய உணவு வேளையிலும் விளையாட்டு மைதானத்திலும் மாணவர்களின் ஒழுக்கத்தைக் கவனிப்பவர்கள் ஆவரார்கள்.

**Mainstream school (அரசாங்கப் பள்ளிகள)** – சாதாரண பள்ளிகள் முக்கியமாகக் முன்பள்ளி உயர்பள்ளி வயதைக் கொண்ட குழந்தைகளுக்கானதாகும்,

**Occupational therapist (உடல் நலத்தை வளம்படுத்தும் மருத்துவர)** – குறைபாடு உள்ள குழந்தைகள் தமது உடலை வளம்படுத்த அவர்களுக்குத் தேவையான உடற்பயிற்சியை கற்றுக் கொடுப்பவர்கள். அத்தோடு அவற்றிற்குத் தேவையான உபகரணங்கள் பற்றிய அறிவுரையையும் வளங்குபவர்கள்.

**Residential school (மாணவர் விடுதி.)** – மாணவர்கள் பள்ளி வளாகத்திலேயே இரவில் தங்கியிருந்து பள்ளி செல்லும் வசதி கொண்ட பள்ளிகள்.

**SEN and bullying policy (விஷேட கல்வித் தேவைகளும் தொல்லைகளுக்கும்மான கொள்கைகள்)** – இக்கொள்கை விஷேட கல்வித் தேவைக் குழந்தைகளுக்கு ஏனையவர்களால் தொல்லைகள் கொடுக்கப்பட்டால் அதை கையாளும் அணுகு முறைபற்றி விளக்கும் கொள்கைகள்.

**Special educational needs (விஷேடகல்வித் தேவைகள்)** – இங்கிலாந்தில் விஷேட கல்வித் தேவைகள் என்னும் சொற்பதம் ஒரே வயதைக் கொண்ட சாதாரண குழந்தைகள் கற்கும் வீதத்தைப் போல் கற்பதில் கஷ்டம் குறைபாடு உள்ள குழந்தைகளை இது குறிக்கும்.

**Special educational needs code of practice (விஷேட கல்வித் தேவைகக்கான நடைமுறைக் குறியீட்டுகள)** – விஷேட கல்வித் தேவை கொண்ட குழந்தைகளுக்கு பள்ளிக்கும் உள்ளூர் அதிகார சபையும் எவ்வாறு உதவுவது பற்றிய வழிகாட்டி

**Special educational needs co-ordinator** (விஷேட கல்வித் தேவை உதவி **உத்தியோகத்தர)** – விஷேட கல்வித் தேவை கொண்டுள்ள முன்பள்ளிகளில் குழந்தைகளுக்கு பொறுப்பாக இருந்து ஆதரவு செயல்பாடுகள் நடைபெறுவதற்கு பொறுப்பாக இருப்பவர்.

**Special educational needs disability act 2001 – (குறைபாடுள்ள விஷேட கல்வித் தேவைக்கான சட்ட மனு 2001)** – விஷேட தேவைகள் தேவைப்படும் மாணவர்களுக்கான சட்டம் பற்றிய விளக்கங்களும் அதை நடைமுறைப்படுத்தும் சட்டரீதியான நடைமுறைகளுக்கு அவர்களுக்கு ஆதரவு வழங்குவது பற்றிய விளக்கமும்

**Special school (விஷேட பள்ளிக்கூடம)** – முக்கியமாக குறைபாடுள்ள குழந்தைகளுக்கு அல்லது விஷேட கல்வித் தேவைகள் கொண்ட குழந்தைகளுக்கு என உள்ள பள்ளிக்கூடம்

**Specialist unit or resource base (விஷேட பகுதி அல்லது வளங்கள் கொண்டுள்ள பகுதி)** – முன்பள்ளி உயர் பள்ளிகளில் ASD கொண்டுள்ள குழந்தைகளுக்கென வகுப்பு நடத்துவதற்கென பிரத்தியேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இடம். இந்த இடத்தில் சில சமயம் குழந்தைகளுக்கு ஆதரவு அல்லது கற்பித்தல் ஆகியன நடைபெறும்.

**Speech and language therapist (பேச்சு மொழி வன்மையை விருத்தி செய்யும் மருத்துவர்)** – பேச்சு மொழி வன்மை ஆற்றலை விருத்தி செய்யும் மருத்துவ உத்தியோகத்தவர்.

**State or maintained school (தேசிய அல்லது பராமரிப்பு பள்ளி)** பொதுவாக உள்ளூர் அதிகார சபையால் பணஉதவி செய்யப்படும் பள்ளி.

**Statement of special educational needs (விஷேட கல்வித் தேவைகள் பற்றிய அறிக்கை)** – உள்ளூர் அதிகார சபையினரால் கொடுக்கப்படும் இவ்வறிக்கை பள்ளியில் இருக்கும் குழந்தைகளின் தேவைகளுக்கு மேலதிக ஆதரவு அளிப்பது பற்றியதாகும்.

**Treatment and Education of Autistic and related Communication handicapped Children (TEACCH) (ஓஸ்ரிக் மற்றும் பேச்சு சம்பந்தப்பட்ட குறைபாடுகொண்ட குழந்தைகளுக்கான மருத்துவமும் கல்வியும்)** - ASD குறைபாடு கொண்டவர்களுக்கான கற்பிக்கும் அணுகு முறையும் காட்சிப் பொருள் மூலம் வழியிலான கற்பிக்கும் வழி முறைகளும்.

**The National Autistic Society (தேசிய ஓரிசக் கழகம்)** – ASD மற்றும் அவர்கள் குடும்ப அங்கத்தினர் ஆகியோருக்கு ஆதரவு, அறிவுரையும் சேவைகளும் அளித்துதவும் கழகங்கள்.